[1981 மே 7

மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே போய் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது என்றால் அதிக தொலைவு இருப்பதால் அது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே, மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளிலும் இத்தகைய ஜெனரேட்டர் போன்ற வசதிகளைச் செய்து தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே- மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு, மூன்று பெரிய மருத்துவ மனைகள்—குறிப்பாக—விருதுநகர்- சாத்தூர்—சிவகாசி—போன்ற இடங்களில் இருக்கின்றன. அந்த மருத்துவ மனைகளில் எந்த மருத்துவ மனையில் இத்தகைய வசதிகளைக் கொண்டு வரலாம் என்கதை ஆராய்ந்து- அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள அரசு தயாராக இருக்கும்.

தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளையில் மருத்துவ நிலையம் துவக்கும் திட்டம்

*வினா எண். 1011—திரு: எம்: எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளையில் அரசு மருத்துவ நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே அங்கே இருக்கக்கூடிய கிராமப் பொது மக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடமிருந்தும் ஏற்கனவே உறுதியளித்த நன்கொடைத் தொகை அரசுக்கணக்கில் செலுத்தவில்லை. ஆகவே அரசு மருந்தகம் இன்னும் திறக்கப்படவில்லை.

திரு. எம். எஸ் மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து அதற்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூபாய் 1 இலட்சத்தைச் செலுத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தொகையை அனுப்ப முடிவு எடுத்து விட்டார்கள். எனவே, அந்த மருந்தகத்தை விரைவில் துவங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம் ரூபாய் 30,000 செலுத்த வேண்டும். பொதுமக்கள் ரூபாய் 10,000 செலுத்த வேண்டும். இரண்டு வருஷங்களுக்கான பராமரிப்புச்

1981 மே 7]

செலவுத் தொகையும் ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே ஊராட்சி ஒன்றியம் 1 இலட்ச ரூபாய் செலுத்துமானால், இவைகளை யெல்லாம் அதற்குள்ளே அடங்கிவிடும். அப்படி நிதியைச் செலுத்துகின்ற நிலைமை நிச்சயமாக உருவாக்கப்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் நிச்சயமாக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. தலைஞாயிறு ஒன்றியத்தில் மருத்துவ மனை ஆரம்பிப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். தலைஞாயிறு பகுதியில் வாழ்கிற மக்கள் மிகவும் பிற்பட்டவகுப்பைச் சேர்ந்தவர்கள். அந்தப் பகுதி கடலோரப்பகுதியாக இருப்பதால் அங்கே வாழ்கிற மக்கள் பெரும்பாலானவர்கள் ஏழை எளியவர்களாக இருக்கிறார்கள். அந்த மக்கள் இந்தத் தொகையைச் செலுத்தினால் தான் இந்த மருத்துவ மனை ஆரம்பிக்கப்படும் என்று சொன்னால், அது இந்த ஆண்டில் முடியாது. காரணம், அவர்களுக்குச் செலுத்துவதற்கு அத்தகைய வசதி இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு இந்த நிலையை ஏற்று, பெரும்பகுதி பணத்தை அரசுப் பொறுப்பில் போட்டு, அந்த மக்களின் நன்மையைக் கருதி அரசு மருத்துவ மனையை அங்கே விரைவில் ஏற்படுத்தித் தருவதற்கு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட பகுதியில் மருத்துவ மனை ஆரம்பிப்பதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். அந்த ஒன்றிய மக்கள் அந்தப் பணத்தைக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதை நாம் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் அதைச் செலுத்த முன்வரவில்லை என்றால், பார்த்துக்கொள்ளலாம். இப்போதே அவர்கள் கொடுக்க முடியாது என்று நாம் கருதிவிடக் கூடாது. முடிந்த வரை முயற்சித்துப் பார்ப்போம். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்கு பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு உதவி செய்ய முடியுமோ அவற்றைச் செய்து வருகிறது. அதையெல்லாம் தனியாக கவனம் செலுத்தி கவனித்துக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் அந்தக் காரியங்கள் செய்யப்படும். இந்த இடத்தைப் பொறுத்த வரையில், பணம் செலுத்துவதாகச் சொல்லி இருப்பதால், அதை எதிர்பார்த்து இருக்கிறோம். எந்த அளவிற்குப் பணம் வருகிறதோ அந்த அளவிற்கு அரசுக்கு லோட் குறையும். ஆகவே அந்த வகையில் இந்த உத்தரவைப் போட்டு இருக்கிறோம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே. அந்த கிராமத்து மக்கள் பணம் செலுத்த முடியாது என்பதால்தான் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் இருந்து 50,000 ரூபாய் செலுத்துவது என்று தீர்மானம் போட்டு அதை அரசுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். எனவே விரைவில் அந்தப் பணத்தைக் கொடுத்து விடுவார்கள். அரசு உடனடியாக அந்த மருத்துவ மனையை ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, முன் வரும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான செவிலியர்கள் நியமனம்

*வினா எண். 1012—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு செவிலியர் (ஹெல்த்விசிட்டர்) தான் நியமிக்கப்பட்டுள்ளாரா ?

(ஆ) ஆம் எனில் அதன் எல்லையைக் கருத்தில் கொண்டு எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்பொழுது மாநிலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவைக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட சுகாதார மேற்பார்வையாளர்கள் (ஹெல்த் விசிட்டர்) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு சுகாதார மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, ஹெல்த் விசிட்டர்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவான பெரிய எல்லைக்குள்ளே இருக்கும்படியான ஒரு நிலையத்தில் பணிசெய்வதுஎன்று சொன்னால் அங்கேயும் ஒருவர் என்ற நிலை ஏற்பட்டால் வேலை சரிவர நடக்க முடியாது. ரொம்ப நெருக்கமான ஜனத்தொகை உள்ளபகுதிகளாக இருந்தால் அப் படிப்பட்ட பகுதிகளில் தூரம் குறைவாக இருக்கும். அங்கே ஜனத் தொகை கொண்டு நியமனம் செய்யலாம். ஆனால் எல்லை விரிவாக இருந்தால் அவர்களால் அந்தப் பணியை சரியாகச் செய்ய முடியாது. ஆகவே எல்லா இடங்களிலும் இந்த ஜனத் தொகை அடிப்படை மட்டுமே என்று வைத்துக்கொள்ளாமல். ஜனத்தொகை, இடத்தின் விஸ்தீரணம் ஆகிய இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த ஹெல்த் விசிட்டர்கள் நிய மிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.